» மனிதர்களாக பிறந்த நாம் அடுத்த நிலைக்கு செல்ல வேண்டும் என்றால் முக்தி கிடைக்க வேண்டும். அந்த முக்தி நிலையை அடைவது என்பது அத்தனை எளிதான விஷயமல்ல. கங்கையில் குளித்தல், பகவத் கீதையை படித்தல், காயத்ரி மந்திரத்தை உச்சரித்தல், துளசியை கொண்டு வீட்டில் பூஜை செய்தல், சாளக்கிராம பூஜை செய்தல், ஏகாதசி விரதமிருத்தல், பகவான் நாமத்தை உச்சரித்தல் இவைகளை கடைபிடித்தால் நிச்சயம் முக்தி என்கிறது நாராயணீயம்.

## புராணத்தில் ஏகாதசி :

» விஷ்ணு பகவான் மனிதர்கள் வாழும் காலத்தில் அறிந்தும், அறியாமலும் செய்யக்கூடிய பாவங்களுக்கு தண்டனைகளை ஏற்படுத்தி, அதற்காக எமலோகத்தை சிருஷ்டித்து எமராஜனையும் அந்த லோகத்திற்கு நியமித்தார்.

» எமலோகத்திற்கு ஒருநாள் விஷ்ணு விஜயம் செய்தபோது, அங்கு மனிதர்கள் படும் அவஸ்தையை கண்டு மனமிறங்கி ஏகாதசி விரதம் பற்றி அவர்களுக்கு கருணையுடன் எடுத்துரைத்தார். யார் இந்த விரதம் இருக்கிறார்களோ அவர்கள் பிறவிப்பயன் நீங்கி வைகுண்டம் சேர்வார்கள் என உறுதியளித்தார்.

## ஏகாதசி புராணக்கதை :

» முரன் என்னும் அசுரன் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மானிடர்களுக்கும் மிகுந்த தொல்லை அளித்து வந்தான். இதனால் அவர்கள் அந்த அசுரனை அழித்து தங்களை காக்குமாறு ஈசனை துதித்தனர். அவர்களை மகாவிஷ்ணுவிடம் சரணடைய கூறினார் சிவபெருமான். அதன்படி அனைவரும் விஷ்ணுவை சரணடைந்தனர். அவர்களை காக்க எண்ணிய மகாவிஷ்ணு, அந்த அசுரனோடு போர் புரிய தொடங்கினார். போர் 1000 ஆண்டுகள் கடுமையாக நீடித்தது. அதன்பிறகு மிகவும் களைப்படைந்தவராய் மகாவிஷ்ணு பத்ரிகாஸ்ரமத்தில் உள்ள ஒரு குகையில் படுத்து ஓய்வெடுத்தார்.

» அந்த நேரத்தை தனக்கு சாதகமாக்கி கொண்டு, முரன் பகவானை கொல்ல துணிந்தபோது, அவருடைய திவ்ய சரீரத்தில் இருந்து அவருடைய சக்தி ஒரு பெண் வடிவில் வெளிப்பட்டது. அந்த சக்தியை அசுரன் நெருங்கிய வேளையில் அவரிடம் இருந்து வெளிப்பட்ட ஓங்காரமே, அசுரனை எரித்து சாம்பலாக்கியது.

» விழித்தெழுந்து நடந்ததை கண்ட நாராயணன், அந்த சக்திக்கு ஏகாதசி எனப் பெயரிட்டு உன்னை விரதம் இருந்து போற்றுவோருக்கு நான் சகல நன்மைகளையும் தருவேன் என வரமளித்து தன்னுள் மீண்டும் சக்தியை ஏற்றுக்கொண்டார். எனவே, ஏகாதசி நாளில் நாமும் கண்விழித்து விரதத்தை கடைபிடித்தால் மகாவிஷ்ணுவின் அருள் பரிபூரணமாக கிடைக்கப்பெற்று நீங்காப் புகழுடன் வாழ்வோம் என்பது ஐதீகம்.

## ஏகாதசி விரதமுறை :

» ஏகாதசி விரதத்தை மேற்கொள்ள நினைப்பவர்கள், ஏகாதசிக்கு முதல் நாளான தசமியன்று பகலில் ஒருவேளை மட்டுமே உணவு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏகாதசி அன்று அதிகாலையிலேயே குளித்து விட்டு, விரதத்தை தொடங்க வேண்டும்.

» ஏகாதசி விரதத்தை மூன்று நாட்கள் என்னும் முறையில் அனுசரித்தால் பலன் நிச்சயம். தசமி அன்று ஒரு வேளை உணவு உண்டு மறுநாள் ஏகாதசி அன்று முழு பட்டினி இருந்து, அதற்கு மறுநாள் துவாதசி அன்று காலையிலேயே உணவு உண்டு விரதத்தை முடிக்க வேண்டும்.

» ஏகாதசி திதி முழுவதும் பூரண உபவாசம் இருத்தல் பலன் தரும். ஏழு முறை துளசி இலையை பகவான் நாமம் சொல்லி சாப்பிடலாம். உடல்நிலை மற்றும் வயோதிகம் காரணமாக பூரண உபவாசம் இருக்க முடியாதவர்கள் பழங்கள், பால், தயிர் போன்றவற்றை பூஜையில் வைத்து இறைவனுக்கு படைத்து பின் பிரசாதமாக உண்ணலாம். ஏகாதசிக்கு அடுத்த நாளான துவாதசி அன்று அதிகாலையில் உணவு அருந்துவதை தான் நாம் பாரணை என அழைக்கிறோம்.

» இந்த நாளில், பெருமாளை ஆராதனை செய்யலாம். விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்யலாம். நாராயண நாமம் சொல்லி, துளசி தீர்த்தம் பருகலாம். அருகில் உள்ள கோயிலுக்கு சென்று, பெருமாளை வழிபடலாம். துளசி மாலை சாற்றி பிரார்த்தனை செய்யுங்கள்.

## ஏகாதசி விரத மகிமை :

» சிவபெருமான், ஒருமுறை பார்வதிதேவிக்கு ஏகாதசி விரத மகிமையை எடுத்து சொன்னார். ஏகாதசி விரதத்திற்கு பாவத்தை போக்கும் சக்தி உண்டு. அஸ்வமேதயாகம் செய்த பலனை ஏகாதசி விரதத்தால் பெறமுடியும். முப்பத்து முக்கோடி தேவர்களும் அனுசரிக்கும் விரதம் இது என்று விளக்கினார்.

» உள்ளத்தின் பக்தி உணர்வுகளையும், உடலின் ஆரோக்கியத்தையும் இணைப்பது விரதம். இதனால் உள்ளத்தூய்மை, உடலின் தூய்மை முதலான பலன்கள் கிடைக்கின்றன. எனவே, ஏகாதசி விரதம் இருப்பவர்கள் சகலவிதமான சௌபாக்கியங்களையும் பெறுவார்கள்.

# 25 ஏகாதசிகள்

1. சித்திரை வளர்பிறை ஏகாதசி காமதா ஏகாதசி
2. சித்திரை தேய்பிறை ஏகாதசி பாப மோசனிகா ஏகாதசி
3. வைகாசி வளர்பிறை ஏகாதசி மோகினி ஏகாதசி
4. வைகாசி தேய்பிறை ஏகாதசி வருத்தினி ஏகாதசி
5. ஆனி வளர்பிறை ஏகாதசி நிர்ஜல ஏகாதசி
6. ஆனி தேய்பிறை ஏகாதசி அபார ஏகாதசி
7. ஆடி வளர்பிறை ஏகாதசி சயன (அ) தேவசயனி (அ) பத்ம ஏகாதசி
8. ஆடி தேய்பிறை ஏகாதசி யோகினி ஏகாதசி
9. ஆவணி வளர்பிறை ஏகாதசி புத்ரஜா ஏகாதசி
10. ஆவணி தேய்பிறை ஏகாதசி காமிகா ஏகாதசி
11. புரட்டாசி வளர்பிறை ஏகாதசி பத்மநாபா ஏகாதசி
12. புரட்டாசி தேய்பிறை ஏகாதசி அஜ ஏகாதசி
13. ஐப்பசி வளர்பிறை ஏகாதசி பாபாங்குசா ஏகாதசி
14. ஐப்பசி தேய்பிறை ஏகாதசி இந்திரா ஏகாதசி
15. கார்த்திகை வளர்பிறை ஏகாதசி பிரபோதின ஏகாதசி
16. கார்த்திகை தேய்பிறை ஏகாதசி ரமா ஏகாதசி
17. மார்கழி வளர்பிறை ஏகாதசி வைகுண்ட ஏகாதசி
18. மார்கழி தேய்பிறை ஏகாதசி உற்பத்தி ஏகாதசி
19. தை வளர்பிறை ஏகாதசி புத்ரதா ஏகாதசி
20. தை தேய்பிறை ஏகாதசி சபலா ஏகாதசி
21. மாசி வளர்பிறை ஏகாதசி ஜெய ஏகாதசி
22. மாசி தேய்பிறை ஏகாதசி ஷட்திலா ஏகாதசி
23. பங்குனி வளர்பிறை ஏகாதசி ஆமலகி ஏகாதசி

24. பங்குனி தேய்பிறை ஏகாதசி விஜயா ஏகாதசி

25. அதிக ஏகாதசி கமலா ஏகாதசி

## சித்திரை மாத ஏகாதசி

### காமதா ஏகாதசி

» **சித்திரை மாதம் வளர்பிறை ஏகாதசி, காமதா ஏகாதசி ஆகும்.** காமதா என்பதன் அர்த்தம் நமது விழைவுகளை பூர்த்தி செய்வது என்பதாகும். இந்த ஏகாதசி விரதம் இருந்து மகாவிஷ்ணுவை துதிப்பவருக்கு சாபங்கள் நீங்கும்.

» காமதா ஏகாதசி கதை கிருஷ்ண பரமாத்மா தர்மருக்கு எடுத்து சொன்னதாகும். இந்த ஏகாதசி விரதத்தினை முறையாக கடைபிடிப்பவர்கள் அனைவரும், தான் செய்த அனைத்து பாவங்களில் இருந்தும் விடுபடுவர்.

» காமதா ஏகாதசி விரதம் இருக்க முடியாதவர்கள் விரத கதையையும், பலனையும் பிறருக்கு எடுத்து கூறுவதன் மூலம், பசுவினை தானம் செய்த புண்ணியம் பெறுகிறார்கள்.

#### காமதா ஏகாதசி புராணக்கதை :

» முன்பொரு காலத்தில், ரத்னபுரா எனும் செல்வச்செழிப்பான நகரை புண்டரிகர் எனும் மன்னன் ஆண்டு வந்தார். அந்த நகரத்தில் பல கந்தர்வர்களும், கின்னரர்களும், அப்சரசுகளும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுள் சிறந்த இசைக்கலைஞரான 'லலித்' மற்றும் அவரது மனைவி 'லலிதா' இருவரும் மன ஒற்றுமையுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். மேலும், தங்களுக்குள் அதிகமான அன்பையும் கொண்டிருந்தனர்.

» இந்நிலையில் ஒருமுறை மன்னர் புண்டரிகர் முன்னிலையில், லலித் மட்டும் தனியாக, தனது மனைவியை விட்டு பிரிந்து ஒரு பாடல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உண்டானது. இந்நிகழ்ச்சி வெகுநேரம் நடைபெற்றது. இதுவரை தனது மனைவியை பிரியாத லலித்திற்கு, இது மிகப்பெரிய பிரிவு போல் தோன்றியது. இதனால் லலித்தின் சிந்தனை தடுமாறி, அவரின் எண்ணம் பாடலில் நிலை கொள்ளாமல் அடிக்கடி பிழை இழைத்தார்.

» லலித் பாடும் பாடலில் பிழை உண்டாவதை கவனித்த மன்னர் புண்டரிகர், கவனம் சிதறிய காரணத்திற்காக சாபம் கொடுத்துவிட்டார். அதாவது மனிதர்களை கொன்று புசிக்கும் ராட்சஸனாக மாறிவிட்டார் லலித். லலித்தின் கோர வடிவுடைய உருவத்தை காண்பவர்களுக்கு அச்சத்தையும், பயத்தையும் அளித்தது.

» லலித்தின் நிலையை அறிந்த லலிதா கவலையுடன், லலித் செல்லும்